# சுந்தரர் தேவாரத்தில் தத்துவச் சிந்தனைகள்

*ப. தங்கத்துரைச்சி*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)*
*குற்றாலம்*

**முன்னுரை**

சங்க காலம் தொட்டே தமிழர்கள் தத்துவச் சிந்தனைகளில் மேம்பட்டிருந்தனர். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கணியன் பூங்குன்றனாரின் கருத்து உலகளாவிய தத்துவச் சிந்தனைக்கு சிறந்த உதாரணம் ஆகும். நிலையாமையை வலியுறுத்தி மதுரைக் காஞ்சி பாடினார் மாங்குடி மருதனார். உயிர்களின் பசியைப் போக்குவது சிறந்த அறமாகும் என்ற தத்துவத்தைப் போதித்தது மணிமேகலைக் காப்பியம். அந்த வகையில் பன்னிரு திருமுறைகளில் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டிருக்கும் சுந்தரர் தேவாரத்தில் காணப்படும் வாழ்வியல் சார்ந்த தத்துவச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**வாழ்க்கை நிலையாமை**

உலக வாழ்க்கை நிலையற்றது. உலகப் பொருள்கள் அனைத்தும் அழியக் கூடியனவே. அழியாது நிலைத்து நிற்பது பரம்பொருள் ஒன்றே என்பர். இக்கருத்தையே திருவள்ளுவர்,

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு'' (குறள் : 350)** என்று கூறியுள்ளார்.

உலக வாழ்க்கை நிலையற்றது என்பதை உணர்ந்த சுந்தரர்,

**நிலவெண்மதி சூடிய நின்மலனே**
**நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார்**
**நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில்**
**சொல்லாய்க் கழிகின் றதறிந்தடியேன்**
**தொடர்ந்தேன் உய்யப்போ வதோர் சூழல் சொல்லே**
**(7-3-1) (ஏழாம் திருமுறை - மூன்றாம் பதிகம் - ஒன்றாம் பாடல்)**

என்ற பாடலில், வெண்மையான நிலவினைச் சூடிய மாசற்றவனே, உலகில் தோன்றிய அனைவரும் நல்ல துணையாகிய மனைவியைப் பெற்றார் இல்லற நெறியில் ஒழுகினார் உண்டார் உடுத்தார் மூப்படைந்தார்' என்று உலகில் சொல்லப்படும் நடைமுறையை அறிந்து அதை வெறுத்து அடியேன் உன்னை அடைந்தேன். இதிலிருந்து மீள அருள்வாயாக என்று இறைவனை வேண்டுகிறார்.

மேலும், இம்மண்ணுலகம் நிலையற்றது. இங்கு என்னை மனிதனாகப் படைத்து விட்டாயே என்று இறைவனிடம்,

**வறிதேநிலை யாதஇம் மண்ணுலகில்**
**நரனாக வகுத்தனை** (7-3-2) எனக் கேட்கிறார்.

ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்தும் வகையில்,

**மத்த யானை யேறி மன்னர்**
**சூழவரு வீர்காள்**
**செத்த போதில் ஆரும் இல்லைஷ**
**சிந்தையில் வைம்மின்கள்'' (7-7-1)**

என்ற மதம் கொண்ட யானையின் மீது ஏறி, மன்னர் சூழ பவனி வருகின்றவர்களே, நீங்கள் இறக்கும்பொழுது, உமக்கு இவர்கள் யாரும் துணையாக இருக்க மாட்டார்கள் என்பதை மனதில் வையுங்கள் என்று கூறுகிறார். நம்மிடம் செல்வம் இருந்தால் நம்மைச் சுற்றி பலபேர் இருப்பார்கள். ஆனால் நாம் இறக்கும் பொழுது நமக்கு யாரும் துணை கிடையாது என்ற வாழ்வியல் சிந்தனையை இப்பாடலில் எடுத்துக் காட்டுகிறார் சுந்தரர்.

மனிதனாக மட்டுமல்ல, இவ்வுலகில் ஓர் உயிராகத் தோன்றிவிட்டாலே மரணம் என்பது நிச்சயம் என்ற சிந்தனையைத்,

**தோற்றம் உண்டேல் மரணம் உண்டு** (7-7-2) என்று குறிப்பிடுகின்றார்.

வாழ்க்கை என்பது, இன்பமும், துன்பமும் நிறைந்தது என்பதை,

**இன்பம் உண்டேல் துன்பம் உண்டு** (7-7-8) பாடலில் கூறுகின்றார்.

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**

**பிற்பகல் தாமே வரும் (குறள் : 319)** என்ற வள்ளுவரின் சிந்தனையைத் தன் பாடலில்,

**செற்றொருவரைச் செய்த தீமைகள்**

**இம்மையே வரும் திண்ணமே(7-35-4)**

ஒருவரைப் பகைத்து அவர்க்கு தீங்கிழைத்த பாவங்கள் மறுமைவரைக் காத்திராமல் இப்பொழுதே வந்து வருத்தும் என்று காட்டுகிறார்.

நாம் நன்றாக இளமையோடு இருக்கும்பொழுதே அறங்கள் செய்ய வேண்டும் என்ற சிந்தனையை,

**புறந்திரைந்து நரம்பெழுந்து**
**நரைத்துநீயுரை யால்தளர்ந்து**
**அறம்புரிந்து நினைப்பது ஆண்மை**
**அரிதுகாண் இ ்.து அறிதியேல்" (7-35-3)**

தோல் சுருங்கி, நரம்புகள் வெளித்தோன்றி, வாய்குழறும் நிலை வந்தபின்பு அறத்தைச் செய்ய நினைப்பது பயனற்றது. இதனை அறியுங்கள் என்று இப்பாடலில் வலியுறுத்துகிறார்.

**உடல் நிலையாமை**

உடல் அழியக்கூடிய இயல்பை உடையது. அதனால் உடலின் மீது பற்று வைக்காதீர்கள் என்பர் தத்துவவாதிகள். இச்சிந்தனையை சுந்தரர் பல பாடல்களில் எடுத்துக் கூறுகிறார்.

**நிணம்படும் உடலை நிலைமையென்று ஓரேன் (7-14-8)**

நான் இவ்வுடம்பை நிலைத்த தன்மையுடையது என்று எண்ணவில்லை என்று இப்பாடலில் கூறுகிறார்.

ஆன்மாவை மூடியுள்ள நோயாகிய இவ்வுடம்பின் தன்மையை அறிந்து கொண்டேன் என்று,

**பொத்தினநோய் இது இதனைப் பொருளறிந்தேன் (7-51-1)**

என இப்பாடலில் சுட்டுகிறார்.

நாம் ஒவ்வொருவரும் தான் என்ற அகந்தையோடு, நம்மை உயர்வாக எண்ணிக் கொள்கிறோம். நம்மை மன்னராக நினைத்துக் கொள்கிறோம். ஆனால் இந்த உயிரைத் தாங்கிய உடலான மன்னர் நாள்தோறும் தேய்ந்து அழிந்து கொண்டிருக்கிறார். இந்த நிலையில்லாத வாழ்வை, மனமே விட்டு விடுவாயாக என்று,

**வேந்த ராய்உல காண்டு அறம் புரிந்து**
**வீற்றி ருந்தஇவ் வுடலானது தன்னைத்**
**தேய்ந்துஇ றந்துவெந் துயர்உழந் திடும்இப்**
**பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே** (7-64-6) என இப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

மேலும் அன்புடைய சுற்றத்தாரும், துணையாய் உள்ளவர்களும், உடல்மேல் விழுந்து அழுது எழும்படி, உயிரானது உடலைவிட்டுப் போய்விடும் என்ற நடைமுறைச் சிந்தனையை,

**பரிந்த சுற்றமும் மற்றுவன் துணையும்**
**பலரும் கண்டழு தெழஉயிர் உடலைப்**
**பிரிந்து போமிது நிச்சயம் (7-64-8)** என்ற பாடலில் சுட்டிக் காட்டுகிறார்.

ஒன்றும் செய்யாமல் இந்த உடலைச் சுமந்து கொண்டு திரிகின்றோம். நாம் இறந்த பின்னர் இந்த உடலை நரிகள் உண்பதை அறிய மாட்டோம். எமன் வந்து அழைக்கும் முன்னர் நல்லதைச் செய்யுங்கள் என்று மக்களுக்கு அறிவுறுத்தும் விதமாக,

**பறியே சுமந்து உழல்வீர்பறி**
**நரிகீறுவது அறியீர்**
**குறிகூவிய கூற்றம் கொளும்**
**நாளால் அறம் உளவே (7-78-1)**

என்று உடல்நிலையற்றது என பல பாடல்களின் மூலம் மக்களிடம் எடுத்துக்கூறி நல்லறங்களைச் செய்யுமாறு வலியுறுத்துகிறார்.

**பிறவி நிலையாமை**

“அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்கிறார் ஒளவை பிராட்டியார். உலகப் பிறப்புக்களுள் அரிதான பிறப்பு மனிதப் பிறப்பு ஆகும். இனியொரு முறை பிறந்தாலும் மனிதராக நாம் பிறப்போமா என்பது கேள்விக்குறிதான். இந்தப் பிறவியும் நிலையற்றது. எனவே பிறந்த இப்பிறப்பில் அறம் செய்யுங்கள் என்ற சிந்தனையை மக்கள் மனதில் விதைக்கிறார். இதனை,

**வாழ்வாவது மாயம் இது**
**மண்ணாவது திண்ணம்**
**பாழ்போவது பிறவிக்கடல்**
**பசிநோய் செய்த பறிதான்**
**தாழாது அறம் செய்ம்மின் (7-78-1)** என்ற பாடலில் சுட்டிக் காட்டுகிறார்.

மேலும், இப்பிறவியானது உறங்கி விழிப்பது போன்றது. இளமையோ ஓடுகின்ற நீரின் கரை அரிக்கப்படுவது போல கரைந்து போகும் என்று காட்டுகிறார். இதனை,

**ஓடும்புனற்கரை யாம்இளமை**
**உறங்கி விழித்தால் ஒக்கும் பிறவி** (7-3-4) என்ற பாடல் அடிகளால் அறியலாம்.

ஆசையே துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்றார் புத்தர். இப்பிறவித் துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஐம்புலன்கள் என்ற தத்துவ சிந்தனையை பல பாடல்களில் எடுத்துக் காட்டுகிறார். இதனை,

**வாழ்வர் கண்டீர் தம்முள் ஐவர்**
**வஞ்ச மனத் தீரே” (7-7-4)**
**அரித்து நம்மேல் ஐவர் வந்திங்கு**
**ஆறலைப்பான்” (7-7-5)**
**ஐவர் கொண்டிங்கு ஆட்ட ஆடி**
**ஆழ்கு ழிப்பட்டு” (7-5-1)**
**புலன் ஐந்தும் மயங்கி அகம் குழைய (7-3-5)**

முதலிய பாடல் அடிகளின் மூலம் விளக்குகிறார்.

**முடிவுரை**

உலக வாழ்க்கை, உடல், பிறவி அனைத்துமே நிலையற்றது என்ற நிலையாமைத் தத்துவத்தை சுந்தரர் தன்னுடைய பல பாடல்களில் எடுத்துக் காட்டியதோடு மட்டுமல்லாமல் அடுத்தவர்களுக்கு நன்மை செய்யுங்கள் என்பதையும் வலியுறுத்துகிறார்.

**பார்வை நூல்கள்**

1. எம்.நாராயண வேலுப்பிள்ளை (உரையாசிரியர்) பன்னிரு திருமுறைகள் - தொகுதி – 10 வர்த்தக பதிப்பக வெளியீடு.
2. தமிழண்ணல், வாழ்க்கைக்கு ஒளிதரும் வள்ளுவம், சிந்தாமணி செல்வ வெளியீடு, மதுரை.
3. சாமிநாதையர், உ.வே.பத்துப்பாட்டு மூலமும் நச்சினிக்கினியார் உரையும்.